DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW -6

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரோஷன் ஜமால் |
| Father / Husband Name | மெகபூ பாஷா |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07. 07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேலவளம்பேட்டையில் வசித்து கடை நடத்தி வருகிறேன். சாட்சி லியாகத்அலி என்பவரை தெரியும். என்னிடம் காட்டபடும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான்.(அந்த கையொப்பம் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) கடந்த 10.11.2025 ம் தேதி மாலை 03.30 முதல் 03.45 மணிக்குள் கருங்குழி ஆலடிபட்டியான் காபி கடைக்கு எதிரே ஒரு இருசக்கர வாகனத்தின் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்து சம்மந்தமாக போலிசார் அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அப்போது நான் இந்த கையொப்பத்தை போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தில் இறந்து போன மெகரூன்பி என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் அவர் எங்கள் ஊர்காரர். நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் ஆலடிபட்டியான கடைக்கு முன்பு வைத்து கையொப்பம் செய்தேன். சம்பவ இடத்தின் அருகே பாரத் பெட்ரோல் பங்க் அருகில் ஒரு U-turn உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்கிற்கு எதிரே நியூ ரிவர் என்ற பள்ளி உள்ளது என்றால் சரிதான். மேம்பாலத்திற்கு முன்னால் இடது பக்கம் கருங்குழிக்கு செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். ஆலடிபட்டியான் கடையில் இருந்து கல்லாறு மேம்பாலத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 -20 மீட்டர் இருக்கும். சம்பவ இடத்தில் சென்டர் மீடியனில் பூச் செடி இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் எனக்கு பரிசட்சையான இடம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த போது அங்கு சுமார் 15 பேர் இருந்தார்கள். விபத்து நடந்ததை சென்று நான் பார்த்தேன். போலிசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சுமார் 06.00 மணியளவில் போலிசார் என்னை போன் செய்து கூப்பிட்டார்கள். போலிஸ் போன் செய்து வர சொன்ன பிறகு தான் நான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த

ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் வரைபடம் போட்டதை பற்றி எழுதியிருந்தது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் இறந்து போன நபர் என்னுடைய உறவினர் என்பதால் போலிசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 192/2026

Miscellaneous :

Sessions : PW -7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | அப்துல்லத்தீப்பாஷா |
|---|---|
| Father / Husband Name | மஸ்தான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07. 07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகத்தில் வசித்து மசூதியில் நிர்வாகனத்தில் உள்ளேன். விபத்தில் இறந்து போன மெகரூன்பி என்பவர் என்னுடைய உறவினர். 10.05.2025 அன்று மெகரூன்பி என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரிந்து நான் மறுநாள் 11.05.2025 அன்று மதுராந்தகம் அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் இறந்திருந்தார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் விபத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. இறந்த நபர் என்னுடைய நபர் அண்ணி என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.